# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 148 /2023

## வழக்கு சாட்சி :PW3(LW2)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அடக்காயி | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | குஞ்சான் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆவாரங்குடிப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | |

1,2 எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 14th day of October 2024.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆவாரங்குடிப்பட்டியில் குடியிருந்து வந்து விவசாய வேலை பார்த்து வருகிறேன். கடந்த 02.03.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு கருப்பையா வீட்டில் பைப் லைன் போட்ட போது எங்களுக்கு சொந்தமான இடத்திலும் , பைப் லைன் போட்டுகொண்டு இருந்தார்கள். அதனால் நானும், எனது மகன் அழகப்பன் அதை தேக்கச் சென்றோம். ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள். எனது மகனை தாக்கியதில் அவரது இடது கை கட்டை விரலில் காயம் ஏற்பட்டது. நான் தடுக்கச் சென்ற போது எதிரி குமார் என்னை கீழே தள்ளியதில் எனக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது. எனது கணவர் எங்கள் இருவரையும் கீரனூர் அரசு மருத்துவமனை அழைத்து சென்றார் . அங்கு முதலுதவி செய்து விட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எ.த.கு.வி**

இல்லை.